ஜூலை 1-7

**பாடம் 2**

# பவுலின் அதிகாரமும் சுவிசேஷமும்

**மனன வசனம்**

**இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிற வனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக் காரனல்லவே. 1பேதுரு 1:22.**

**ஆராய்ச்சிக்கு**

**2 பேதுரு 3:15,16;**

**கலா 1;**

**பிலி 1:1;**

**கலா 5:12.**

ஜூலை1 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



ஆண்-பெண், இன-மத-சமுதாயப் பாகுபாடின்றி எல்லாரும் ஒன்றுகூடும்விதத்தில், ஒரு பல்கலைக்கழக மாணவர்கள் அதன் வளாகத்தில் மையம் ஒன்றைக் கட்டினார்கள். பல வருடங்கள் கழிந்தன. தாங்கள் படித்த பல்கலைக்கழகத்தைப் பார்க்கும்படி, அந்த மாணவர்கள் மீண்டும் அங்குச் சென்றார்கள். ஆனால், அங்குப் படித்துவந்த மாணவர்களோ அந்த மையத்தை மாற்றியமைத்திருந்தார்கள். எல்லாரும் ஒருமனப்பட்டுக் கூடும்விதத்தில்தான், அந்த மையம் விஸ்தாரமாக முன்பு கட்டப்பட்டிருந்தது. இப்போது, இனம், குலம் போன்றவற்றின் அடிப்படையில், தனித்தனியாக மக்கள் கூடும்படி, சிறுசிறு அறைகளாக அது மாற்றப்பட்டிருந் தது. அவ்வாறு மாற்றியமைத்த மாணவர்களிடம் கேட்டால், பழங்காலப் பழக்கவழக்கங்களின் அடிப் படையில் அவ்வாறு மாற்றவதற்கு தங்களுக்கு அதி காரம் இருப்பதாக இந்த மாணவர்கள் வாதிட்டிருப் பார்கள்.

கலாத்தியாச் சபைகளுக்கு பவுல் நிருபம் எழுதிய போது, இப்படிப்பட்ட சூழ்நிலைதான் நிலவியது. விசு வாசத்தைமட்டும் வைத்து, புறஜாதியாரைச் சபையில் சேர்த்துக்கொள்வதற்கு, பொய்ப்போதகர்கள் எதிர்த்து நின்றார்கள். புறஜாதியார் விருத்தசேதனமடைந்தால் தான், சபையில் உறுப்பினர்களாக முடியுமென வற்புறுத் தினார்கள்.

நற்செய்தியின் சாராம்சத்திற்கே இது ஊறுவிளை வித்ததாகக் கண்டார் பவுல்; உடனே செயலிலும் இறங் கினார்; அதுதான், கலாத்தியருக்கு அவர் எழுதின நிருபம்.

2017, ஜூலை 8 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## கடிதம் எழுதிய பவுல்

**பவுலின் நிருபங்களை ஆதிச்சபையினர் எவ்வாறு கருதினார்கள்? 2பேதுரு 3:15,16. ஆவியான வரின் ஏவுதல்பற்றி அதிலிருந்து விளங்குவது என்ன?**

---

இலக்கியப் படைப்பு ஒன்றைப் படைப்பதற்காக, கலாத்தியருக்கு பவுல் நிருபம் எழுதவில்லை. தானும் கலாத்தியாவின் விசுவாசிகளும் சம்பந்தப்பட்டிருந்த ஒரு சூழ்நிலையை பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி அவர் அணுகுகிறார்.

கலாத்தியருக்கு எழுதின நிருபமும் இதுபோன்ற பிற நிருபங்களும் பவுலின் அப்போஸ்தல ஊழியத்தில் முக்கியமானவை. புறஜாதியருக்கு நற்செய்தி அறிவித்து, மத்திய தரைக் கடல்பகுதி முழுவதிலும் அநேக சபைகளை நிறுவினார். நேரம் கிடைத்தபோதெல்லாம் அந்தச் சபைகளைச் சந்தித்தார். ஆனால், குறிப்பிட்ட ஓரிடத்தில் வெகுநாட்கள் அவர் தங்கமுடிவதில்லை. அந்தக் குறையைப் போக்கும்படி, சபைகளுக்குக் கடிதமெழுதுவார். பிறகு, பவுலுடைய நிருபங்களின் நகல்கள் வேறு சபைகளிலும் வாசிக்கப்பட்டன. கொலோ 4:16. பவுலின் நிருபங்கள் சில தொலைந்துவிட்டன; ஆனாலும், அவர் எழுதிய நிருபங்களில் பதின்மூன்று புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளன. பவுலின் எழுத்துகள் சில சமயம் வேதவாக்கியங்கள்போலக் கருதப்பட்டதாக 2பேதுரு 3:15,16 இல் பேதுரு கூறுகிறார். சபை வரலாற்றின் ஆரம்பக்காலங்களில் பவுலின் ஊழியம் எவ்வளவு அதிகாரம் உடையதாய் இருந்தது என்பதை இது காட்டுகிறது.

பவுல் தன் நிருபங்களை எழுதுவதற்கு விசேஷித்த முறையைப் பின்பற்றினதாக முன்பு கருதினார்கள். அதாவது, தேவன் ஏவின வார்த்தைகள் என்பதால், ஆவியானவர்தாம் அந்த முறையை அருளியதாக நினைத்தார்கள். ஆனால், ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த இரண்டு அறிஞர்கள் கிட்டத்தட்ட 5 இலட்சம் பாப்பிரைகளை எகிப்தில் கண்டெடுத்தார்கள். அப்போதுதான் இந்தக் கருத்து மாறியது. (பாப் பிரை என்பது கிறிஸ்துவின் காலத்தில் எழுதப்பட்ட பத்திரங்களாகும்; பாப்பிரஸ் எனப்படும் பிரபல எழுதுபொருளில் அவை எழுதப்பட்டன). புதிய ஏற்பாட்டின் பழைய பிரதிகள் சில அவற்றில் இருந்தன. இரசீதுகளும், வரவுச்சீட்டுகளும், வரித்தீர்வைகளும் தனிநபர் கடிதங்களும் அவற்றில் இருந்தன.

பவுலின் காலத்தினர் கடிதமெழுத என்ன முறையைப் பின்பற்றினார்களோ, அதே முறையில்தான் பவுலும் தன் நிருபங்களை எழுதியுள்ளது தெரிகிறது.

1 அனுப்புநர், பெறுநரின் பெயர். அதைத் தொடர்ந்து வாழ்த்துதல்.

2 நன்றிதெரிவிக்கும் வார்த்தைகள் 3 முக்கியக் கருத்து

4 முடிவுரை - இந்த அமைப்பில்தான் நிருபங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதாவது, தன் காலத்துக் கடித அமைப்பின்படி, தன்னுடைய காலத்தினர் எளிதில் புரிந்துகொள்ளும்விதத்தில் பவுல் நிருபங்களை எழுதியுள்ளார்.

---

இன்றைக்கு வேதாகமம் எழுதப்பட்டால், என்ன அமைப்பில், நடையில், வகையில் அது எழுதப்பட்டு, நம்மை வந்து சேரும்படி தேவன் செய்திருப்பார்?

பவுலின் மற்ற நிருபங்களில் இல்லாத விசேஷித்த பல கூறுகளை கலாத்தியர் நிருபத்தில் காணலாம். அவற்றை அறிந்தால், என்ன சூழ்நிலையில் பவுல் அந்த நிருபத்தை எழுதினாரென்பதைப் புரிந்துகொள்ளலாம்.

***கலா 1:1,2 இல் பவுலின் முகவுரையையும், எபே 1:1; பிலி 1:1; 2 தெச 1:1 வசனங்களில் அவருடைய முகவுரையையும் ஒப்பிடுங்கள். ஒற்றுமை-வேற்றுமை என்ன?***

---

கலாத்தியரில் முகவுரை சற்று நீளமாக உள்ளது. மேலும், தன் அப்போஸ்தல அதிகாரத்தை வற்புறுத்துகிறார். 'அப்போஸ்தலன்' என்றால் 'அனுப்பப்பட்டவன்', 'தூதுவன்' என்று அர்த்தம். இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களையும், தமக்குச் சாட்சியாக இருக்கும்படி இயேசு யாருக்குத் தரிசனமாகி கட்டளையிட்டாரோ அவர்களையும்தான் அப்போஸ்தலரென்று புதிய ஏற்பாடு கூறுகிறது. கலா 1:19; 1 கொரி 15:7. அப்படிப்பட்டவர்களில் தானும் ஒருவனென்கிறார் பவுல்.

தன் அப்போஸ்தலத்துவம் எந்த மனிதனையும் சார்ந்ததல்ல என்கிறார் பவுல். ஆகவே, அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தைக் குறைத்துக்காட்ட, கலாத்தியாவில் சிலர் முயன்றிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் அல்ல; இயேசுவை விசுவாசிப்பதால்மட்டுமே இரட்சிப்பு என்று பவுல் பிரசங்கித்தார்; அது சபையில் சிலருக்குப் பிடிக்கவில்லை. பவுல் பிரசங்கித்த நற்செய்தியானது கீழ்ப்படிதலை முக்கிப்படுத்தவில்லையென அவர்கள் நினைத்தார்கள். அவருக்குத் துன்பம் கொடுத்தவர்கள் நயவஞ்சகமாகச் செயல்பட்டார்கள். பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தின் அடிப்படையில் பிரசங்கிப்பதை அறிந்துகொண்டு, அந்த அதிகாரத்திற்கு எதிராகச் செயல்பட தீர்மானித்தார்கள். யோவான் 3:34.

பவுலின் அப்போஸ்தலத்துவத்தை நேரடியாக அவர்கள் மறுக்கவில்லை; மாறாக, அதன் முக்கியத்துவத்தைக் குறைத்துப் பேசினார்கள். முதன்முதலில் இயேசு தெரிந்துகொண்ட சீடர்களில் ஒருவனல்ல பவுல்; எனவே, 'அவனுடைய அதிகாரம் தேவன் கொடுத்தது அல்ல; மனுஷர் கொடுத்தது. அந்தியோகியாவின் சபைத்தலைவர்கள் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கலாம்; ஏனெனில், அவர்கள்தாம் பவுலையும் பர்னபாவையும் நற்செய்தி ஊழியத்திற்கென்று அனுப்பினார்கள். அல்லது, பவுலுக்கு ஞானஸ்நானம் கொடுத்த அனனியா அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கலாம்' என்பதுபோல் பேசினார்கள். அப் 13:1-3; 9:10-18. அந்தியோகியா அல்லது தமஸ்குவிலிருந்து வந்த ஓர் தூதுவனென்று பவுலைக் கருதினார்கள். 'பவுல் பேசுவது அவருடைய சொந்தக் கருத்துதான்; தேவ வார்த்தை அல்ல' என்று வாதிட்டார்கள். எனவேதான், தன் அப் போஸ்தலத்துவம் தேவன் தந்ததென உறுதிப்படக் கூறுகிறார்.

---

நம் சபைக்குள்ளும்கூட வேதாகமத்தின் அதிகாரம் எவ்விதங்களிலெல்லாம் சவால்களைச் சந்திக்கிறது? இவற்றை நாம் எவ்வாறு கண்டுகொள்ளலாம்? வேதாகமத்தின் அதிகாரம் பற்றி உங்கள் மனதில் அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

## பவுலின் சுவிசேஷம்

***கலாத்தியர் நிருபத்தின் வாழ்த்துரையில், தன் அப்போஸ்தலத்துவத்தை உறுதிப்படுத்துவதோடு, வேறு எதையும் பவுல் வலியுறுத்துகிறார்? கலா 1:3-5 ஐ எபே 1:2; பிலி 1:2; கொலோ 1:2 உடன் ஒப்பிடுங்கள்.***

---

---

'கிருபையும் சமாதானமும்' எனும் வாழ்த்து, பவுலின் நிருபங்களுக்கே உரிய தனித்தன்மை. கிரேக்க மற்றும் யூதக் கலாச்சாரத்தில் வாழ்த்துவதற்காகப் பயன்படுகிற வார்த்தைகள் இவை. ஒரு கிரேக்க ஆசிரியர் வாழ்த்தும்போது, 'காய்ரின்' எனும் வார்த்தையைப் பயன்படுத்துவார். பவுல் 'கிருபை' என்பதற்கு 'காரிஷ்' எனும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார்; இரண்டு வார்த்தைகளும் கிட்டத்தட்ட ஒரேவித உச்சரிப்பை உடையவை. மேலும், யூதர்கள் வழக்கமாக வாழ்த்துவதுபோல் 'சமாதானமும்' கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில் பவுல்தான் இந்த இரண்டு வார்த்தைகளையும் அதிகம் பயன்படுத்துகிறார். இவை பவுலுடைய நற்செய்தியின் சாராம்சத்தைத் தெரிவிக்கின்றன. கிருபையையும் சமாதானத்தையும் தருவது பவுல் அல்ல; பிதாவாகிய தேவனும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுமே.

***நற்செய்தியின் வேறென்ன அம்சங்களை கலா 1:1-6 இல் பவுல் விவரிக்கிறார்?***

---

---

நற்செய்தியின் தன்மையை வாழ்த்துரையில் சொல்ல இடம் போதவில்லை; ஆனாலும், அதன் சாராம்சத்தை நான்கே வசனங்களில் அருமையாக விவரிக்கிறார். நற்செய்தியின் அடிப்படைச் சத்தியம் என்ன? நியாயப்பிரமாணத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிவதுதான் நற்செய்தியென்று பவுலின் எதிரிகள் கூறிவந்தார்கள். ஆனால், பவுல் அப்படி நினைக்கவில்லை. சிலுவைமரணம், உயிர்த்தெழுதல்மூலம் கிறிஸ்து நமக்காக நிறைவேற்றியுள்ளதில்தான் நற்செய்தியின் மொத்தமும் அடங்கியிருக்கிறது. நம்மால் செய்யவே முடியாத ஒன்றை கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் செய்திருக்கின்றன. பாவத்தின் வல்லமையையும் மரணத்தின் வல்லமையையும் அவை உடைக்கின்றன; பயத்திலும் அடிமைத்தனத்திலும் அநேகரைக் கட்டியிருக்கும் தீமையின் வல்லமையிலிருந்து, அவருடைய பிள்ளைகளை விடுவிக்கின்றன.

கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு வைத்துள்ள கிருபையையும் சமாதானத்தையும் எண்ணிப்பார்த்து, தேவனைத் துதித்துப் போற்றுகிறார் பவுல். வச 5.

கலா 1:1-5 இல், நற்செய்திபற்றி பல்வேறு வார்த்தைகளில் விவரிக்கிறார் பவுல். ஆனாலும், நற்செய்திபற்றி அதிலிருந்து நீங்கள் புரிந்துகொண்டதை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதுங்கள். உங்கள் பதிலை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.

***பொதுவாக, பவுலின் நிருபங்களில் வாழ்த்துரையைத் தொடர்ந்து என்ன சொல்லப்பட்டிருக்கும்? கலாத்தியரில் காணப்படும் வித்தியாசம் என்ன? கலா 1:6 ஐ ரோமர் 1:8; 1கொரி 1:6; பிலி 1:6; 1தெச 1:4 உடன் ஒப்பிடுங்கள்.***

பவுல் ஒரு சபைக்கு நிருபம் எழுதும்போது, அங்கு நிலவும் சவால்களையும் பிரச்சனைகளையும்பற்றிப் பேசுவார். ஆனாலும், வாழ்த்துரையைத் தொடர்ந்து சபையாரின் விசுவாசத்திற்காக முதலில் தேவனுக்கு ஸ்தோத்திரம்சொல்லுவார்; அல்லது ஜெபிப்பார். பல்வேறு மாறுபாடான நடத்தைகளைக் கொண்டிருந்த கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்திலும் அப்படித்தான் எழுதியிருக்கிறார். 1கொரி 1:4 மற்றும் 5:1 வசனங்களை ஒப்பிட்டு வாசியுங்கள். ஆனால், கலாத்தியாவில் நிலைமை மோசமாக இருந்தது. எனவே, நேரடியாக விஷயத்திற்கு வருகிறார்.

***கலாத்தியாவின் நிலைமை குறித்து பவுல் மிகவும் கவலையடைந்திருந்ததை அவர் சொல்லும் என்ன வார்த்தைகள் தெரிவிக்கின்றன? கலா 1:6-9; 5:12.***

ஒளிவுமறைவின்றி கலாத்தியரைக் குற்றஞ்சாட்டுகிறார் பவுல். கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டதற்கு அவர்கள் நம்பிக்கைத்துரோகம் செய்துவிட்டதாகவும் கூறுகிறார். கலா 1:6 இல் உள்ள ‘திரும்புதல்’ என்பதற்கான கிரேக்க வார்த்தை, தங்கள் நாட்டுக்குத் துரோகம்பண்ணி, படையிலிருந்து விலகும் வீரர்களின் செயலைச் சுட்டிக்காட்டவே பொதுவாகப் பயன்படும். கட்சிமாறி, தேவனிடமிருந்து திரும்பிச்செல்ல ஆரம்பித்துவிட்டதாக கலாத்தியரைக் குற்றஞ்சாட்டுகிறார் பவுல்.

தேவனைவிட்டு கலாத்தியர் விலகினது எப்படி? வேறொரு சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்துவிட்டார்கள். வேறு சுவிசேஷம் எதுவும் இருப்பதாக பவுல் சொல்லவில்லை. ஆனால், கிறிஸ்துவை விசுவாசிப்பதுமாத்திரம் போதாதென்று சபையில் போதித்து வந்த சிலர், வேறொரு சுவிசேஷம் இருப்பதுபோல் நடந்துகொண்டார்கள். அப் 15:1-5. சுவிசேஷத்தை இப்படித் திரித்துக் கூறியது பவுலுக்குப் பிடிக்கவில்லை; எனவேதான், வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள் தேவனால் சபிக்கப்பட்டவர்களெனக் கூறுகிறார். கலா 1:8. இதை வலியுறுத்தும்படி, இரண்டு முறை அவ்வாறு சொல்கிறார். கலா 1:9.

இன்றும் நம் சபைகளில் (சில இடங்களில்) கொள்கையைவிட தனிநபர் அனுபவம் முக்கியப்படுத்தப்படுகிறது. தேவனோடு நமக்குள்ள உறவும் தனிப்பட்ட அனுபவமும்தான் முக்கியமென்கிறார்கள். இத்தகைய அனுபவம் முக்கியமென்றாலும், சரியான கொள்கையின் முக்கியத்துவம்பற்றி, பவுலின் எழுத்துகள் தெரிவிப்பது என்ன?

## பவுலுடைய சுவிசேஷத்தின் மூலாதாரம்

**பிறருடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, பவுல் உருவாக்கியதுதான் அவருடைய நற்செய்தி யென கலாத்தியாவின் கலகக்காரர்கள் கூறினார்கள். மனிதரின் அங்கீகாரத்தை அவர் விரும்பி யிருந்தால், அவர் நிருபத்தில் என்ன மாற்றங்கள் இருந்திருக்கும்? கலா 1:6-9, 11-24.**

---

மனம்மாறிய புறஜாதியாரை விருத்தசேதனம்பண்ணும்படி பவுல் ஏன் வற்புறுத்தவில்லை? புறஜாதியாரைச் சபையில் சேர்ப்பதில்தான் பவுல் குறியாக இருந்தாரென அவருடைய எதிரிகள் குற்றஞ்சாட்டினார்கள். 'புறஜாதியார் விருத்தசேதனத்திற்குப் பழக்கப்படாதவர்களென்று பவுலுக்குத் தெரியும். எனவேதான், அவர்களை இவர் வற்புறுத்தவில்லை. மனிதர்களைப் பிரியப்படுத்தப் பார்க்கிறார்' என்று இவர்கள் நினைத்தார்கள். இத்தகைய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் போதுதான், கலா 1:8,9 வசனங்களில், தன் எதிராளிகளை பவுல்கடுமையாகச் சாடுகிறார். அங்கீகாரத்தை விரும்பியிருந்தால், வேறுவிதமாகப் பதிலளித்திருப்பார்.

**மனிதரைப் பிரியப்படுத்த விரும்பினால், கிறிஸ்துவின் சீடனாய் இருக்கமுடியாதென்று பவுல் சொல்வது ஏன்?**

---

---

**சுவிசேஷத்தையும் அதிகாரத்தையும் தேவனிடமிருந்தே தான் பெற்றுக்கொண்டதாக கலா 1:11,12 வசனங்களில் பவுல் கூறுகிறார். 13-24 வசனங்கள் அதை எவ்வாறு உறுதிப்படுத்துகின்றன?**

---

---

பவுலின் வாழ்க்கைப் பின்னணிபற்றி கலா 1:13-24 வசனங்கள் பேசுகின்றன. அதாவது, அவருடைய மனமாற்றத்திற்கு முன்னும் (வச 13,14), மனமாற்றத்தின் போதும் (வச 15,16), மனமாற்றத்திற்குப் பின்னும் (வச 16-24) நிகழ்ந்த நிகழ்வுகள் சொல்லப்படுகின்றன. இந்த நிகழ்வுகளின் சூழ்நிலைகளை வைத்துப் பார்த்தால், தேவனைத்தவிர வேறு யாரிடமிருந்தும் தான் சுவிசேஷத்தைப் பெற்றிருக்க வாய்ப்பே இல்லையென்று பவுல் வாதிடுகிறார். தன் அழைப்பைக்குறித்து சந்தேகமெழுப்பி, தான் பிரசங்கிக்கும் நற்செய்திக்கு எவரும் பங்கம் விளைவிப்பதை அனுமதிக்க பவுல் விரும்பவில்லை. தனக்குச் சம்பவித்ததையும், எதைப் பிரசங்கிக்கத் தனக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதையும் பவுல் அறிந்திருந்தார்; என்ன விலையானாலும் அதை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தார்.

கிறிஸ்துவில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பில், எவ்வளவுக்கு உறுதியாக இருக்கிறீர்கள்? தேவன் எதற்காக உங்களை அழைத்திருக்கிறாரென்பதை எவ்வாறு நிச்சயமாக நீங்கள் அறியலாம்? உங்கள் அழைப்பைக்குறித்து நீங்கள் நிச்சயத்தோடு இருந்தாலும் பிறருடைய ஆலோசனையைக் கேட்பது ஏன் முக்கியமானது?

“அங்கிருந்த ஒவ்வொரு சபையிலும் பிறப்பிலேயே யூதரானவர்கள் சிலர் இருந்தார்கள். இவர்கள்மூலம் யூத போதகர்கள் எளிதில் சபைக்குள் நுழைந்தார்கள். பவுலின் உபதேசத்தில் தவறு இருப்பதாக வேதவாக்கியங்களைக் கொண்டு நிரூபிப்பது கடினம். எனவே, அவருடைய செல்வாக்கைக் கெடுத்து, அதிகாரத்தைக் குறைக்க அயோக்கியமான வழிமுறைகளைக் கையாண்டார்கள். ‘அவர் இயேசுவின் சீடரல்லர்; இயேசுவிடமிருந்து கட்டளை எதுவும் அவர் பெறவில்லை; ஆனாலும், பேதுரு, யாக்கோபு போன்ற அப்போஸ்தவர்கள் போதித்த உபதேசங்களுக்கு முற்றிலும் மாறானவைகளைப் போதிக்க அவர் துணிவுகொண்டுள்ளார்’ என்றார்கள்.

“அங்குள்ள சபைகளை அழிக்கும் தன்மை அந்தத் தீமைகளில் இருந்ததை பவுல் கண்டபோது, அவர் தன் ஆத்துமாவில் கலங்கினார்; தங்கள் விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கினவர்களை வன்மையாகக் கண்டித்தும், பொய்ப்போதகங்களை வெளியரங்கமாக்கியும் உடனே கலாத்தியருக்கு நிருபத்தை எழுதினார்” – *SFLP, pp.188, 189.*

# கலந்துரையாடக் கேள்வி

1. *நற்செய்தியைப்பற்றி நீங்கள் அறிந்துள்ளதை வகுப்பில் கலந்தாலோசியுங்கள். பிறர் சொல்வதிலிருந்து என்னவெல்லாம் கற்றுக்கொள்ளலாம்?*

2. *கலாத்தியரை வாழ்த்தும்போது, குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக இயேசு மரித்ததாக பவுல் கூறுகிறார். அது என்ன? அதனால் நமக்குப் பயன் என்ன?*

3. *தான் தன் பிதாக்களின் பாரம்பரிய நியாயங்களில் மிகவும் பக்திவைராக்கியமாக இருந்ததாக கலா 1:14 இல் பவுல் கூறுகிறார். ‘பாரம்பரியம்’ என்று, பரிசேயர்களின் வாய்மொழிப் பாரம்பரியங்களையும், பழைய ஏற்பாட்டுப் பாரம்பரிய முறைகளையும் அவர் குறிப்பிட்டிருக்கலாம். நம்முடைய விசுவாசத்தில் பாரம்பரியத்திற்குப் பங்குள்ளதா?*

4. *தனது விசுவாசத்திற்கு மாறாக விசுவாசித்தவர்களை பவுல் ‘பொறுத்துக்கொள்ளாதது’ ஏன்? தவறான உபதேசங்களைப்பற்றி அவர் சொல்வதை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள். கொள்கையில் சமரசம்செய்ய மறுக்கிற பவுலைப்போன்ற விசுவாசிகளை நம் சபை எவ்வாறு பார்க்கிறது?*

**பாடச்சுருக்கம்:** *‘பவுலின் அப்போஸ்தலத்துவமும் சுவிசேஷச் செய்தியும் தேவன் கொடுத்ததல்ல’ என்று சொல்லி, பவுலின் ஊழியத்தைக் கெடுக்க முயன்றார்கள் கலாத்தியாவின் பொய்ப் போதகர்கள். கலாத்திய நிருபத்தின் ஆரம்ப வசனங்களில், இந்த இரண்டு குற்றச்சாட்டுகளையும் எதிர்த்து வாதிடுகிறார் பவுல். ‘இரட்சிப்பைப் பெறுவதற்கு ஒரேவழிதான் உண்டு’ என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்; தன்னுடைய அழைப்பும் சுவிசேஷமும் தேவனிடமிருந்து வந்ததென்பதற்கு தன் மனமாற்றத்தோடு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை ஆதாரமாகக் காட்டுகிறார்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.